இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை - 2022

**SNP 8532/EPD 2232 – விசேட தேவைகள்சார் கல்வியில் கல்வித் தொழில்நுட்பம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 27.08.2022 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

பகுதி - 1 இல் அமைந்துள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி - 2 இல் எவையேனும் இரண்டு (02) வினாக்களுக்கும், பகுதி - 3 இல் எவையேனும் இரண்டு (02) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி – I

1.

அ. கல்வித் தொழில்நுட்பம் எனும் பதத்தை உங்கள் சொந்த மொழியில் சுருக்கமாக விளக்குக.

ஆ. உதாரணங்களை மேற்கோள்காட்டி தகவற் தொழில்நுட்பம் மற்றும் உதவித் தொழில்நுட்பம் ஆகிய பதங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

இ. உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர்கள் அவர்களது கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் ஒரு வசதியளிப்பவராக தங்கள் வகிபங்கை எவ்வாறு வகிக்க வேண்டும் என்பதைச் சுருக்கமாக விவரிக்குக.

ஈ. உள்ளடங்கல் வகுப்பறைக்கான வினைதிறனான கலைத்திட்டத் தழுவல்களின் வகைகளைக் குறிப்பிடுக.

உ. இயலாமையுள்ள மாணவர்களுக்குக் கலைத்திட்டத் தழுவலை மேற்கொள்ளமுன் கருத்தில்கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?

ஊ. தனியாள் மையக் கல்வித்திட்டச் (IEP) செயன்முறையின் படிநிலைகளைப் பட்டியற்படுத்துக.

எ. உதவித் தொழில்நுட்பத்தின் பிரதானமான மூன்று (3) வகைகளையும் சுருக்கமாக விளக்குக.

ஏ. தாராளப்படுத்தப்பட்ட மற்றும் மாற்றீட்டுத் தொடர்பாடல் (Augmentative and Alternative Communication) அமைப்புக்கள் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

# பகுதி - 2

2.

அ. நிரலித்த திட்டக் கற்றலின் முக்கிய அம்சங்களை விவரிக்குக.

(7 புள்ளிகள்)

ஆ. அறிவுசார் இயலாமையுள்ள மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்க நிரலித்த திட்டக் கற்றல் முறையைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(8 புள்ளிகள்)

3.

அ. உள்ளடங்கற் பாடசாலை மற்றும் வகுப்பறை சுற்றுச் சூழலை மாற்றியமைப்பதற்கான உதவித் தொழில்நுட்பத்தினை எவ்வாறு ஒருங்கிணைக்கலாம் என்பதை விளக்குக.

(7 புள்ளிகள்)

ஆ. விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டினை உதவித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எவ்வாறு எளிதாக்கலாம் என்பதை விளக்குக.

(8 புள்ளிகள்)

4.

அ. உள்ளடங்கல் வகுப்பறையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களை அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஊக்குவிப்பதில் திறன் தொழில்நுட்பங்களின் (Smart Technologies) நன்மைகளை விளக்குக.

(7 புள்ளிகள்)

ஆ. கோவிட் - 19 தொற்றுநோய் சூழ்நிலையில் உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்கொண்ட சவால்கள் யாவை?

(8 புள்ளிகள்)

5.

அ. உள்ளடங்கல் வகுப்பறையொன்றில் கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் வசதியளிப்பாளராக, ஆசிரியர்களின் நவீன பாத்திரத்தின் **மூன்று (3)** பண்புகளைப் பற்றி ஆராய்ந்து, நவீன பாத்திரத்தை ஆசிரியர்களின் பாரம்பரிய பாத்திரத்துடன் ஒப்பிட்டு ஆராய்க.

(5 புள்ளிகள்)

ஆ. விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கவும், வசதியளிக்கவும் பல்புல எறிகருவியை (Multi Media) எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி - 3

6.

அ. உள்ளடங்கல் வகுப்பறைக்குப் பாடத்திட்டம் ஒன்றை விருத்தியாக்கும்போது கருத்தில்கொள்ள வேண்டிய முக்கிய காரணிகள் யாவை என்பதனை எடுத்துக்காட்டுகளை மேற்கோள்காட்டி விபரிக்குக.

(7 புள்ளிகள்)

ஆ. உள்ளடங்கல் வகுப்பறை ஒன்றிற்கான பாடத்திட்டத்தில் பல்வேறுபட்ட கற்பித்தல் வழிமுறைகளை எவ்வாறு ஒருங்கிணைக்கலாம் என்பதனை விளக்குக.

(8 புள்ளிகள்)

7.

அ. ஒட்டியத் திருசிய ஒழுங்கீனம் உள்ள பிள்ளைகளின் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் கற்றல் சாதனங்களை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றின்போது கருத்தில் கொள்ளவேண்டிய தனித்துவமான அம்சங்களை விளக்குக.

(8 புள்ளிகள்)

ஆ. விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் காட்சிப்பட ஒழுங்கமைப்பாளர்களின் (Graphic Organizers) நன்மைகளை ஆராய்க

(7 புள்ளிகள்)

8. நீங்கள் கற்பிக்கும் பாடத்தில் இருந்து எந்த ஒரு வகுப்பிற்கும் பொருத்தமான ஏதோ ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

அ. பாடத்திட்டத்திற்கான **மூன்று (3)** குறிப்பான நடத்தைசார் குறிக்கோள்களை எழுதி, அந்தக் குறிக்கோள்களை உள்ளடங்கல் வகுப்பறையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு ஏற்றவகையில் மாற்றியமைக்குக.

(6 புள்ளிகள்)

ஆ. மாற்றியமைக்கப்பட்ட குறிக்கோள்கள் தொடர்பாக **நான்கு (4)** குறிப்பிட்ட கற்றல் செயற்பாடுகளை உருவாக்கி, அந்நோக்கங்களை அடைய விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட மாணவர்களுக்கு அச்செயற்பாடுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குக.

(9 புள்ளிகள்)

9.

அ. கற்றலில் இடர்படும் குழந்தைகளுக்கான தனியாள் மையக் கல்வித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான படிகளை விவரிக்குக.

(7 புள்ளிகள்)

ஆ. டவுன்ஸ் சிண்ட்ரோம் (Down Syndrome) உள்ளது என அடையாளம் காணப்பட்ட குழந்தையின் கற்றல் செயல்திறனை மேம்படுத்த, தனியாள் மையக் கல்வித் திட்டத்தை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.

(8 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*